வைத்துக் கொண்டு பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. ரூ. 300 வருவாய் உள்ள வர்களுக்கு இரண்டு கிலோ சர்க்கரை, ரவா அல்லது மைதா ஒரு கிலோவும் ரூ. 300-க்கு மேல் ரூ. 499 வரை வருவாய் உள்ளவர்களுக்கு 4 கிலோ சர்க் கரையும், ஒரு கிலோ மைதா அல்லது ரவா, ரூ. 500-க்கு மேல் வருவாய் உள்ள வர்களுக்கு 6 கிலோ சர்க்கரையும், 2 கிலோ மைதாவும் கொடுக்கப்படுகிறது. ஆங்காங்கு மாவட்டங்களில் கிடைக்கும் பொருள்களுக்குத் தகுந்தாற்போல், இந்த மாதிரி 4 கிலோ வரையில் சர்க்கரை பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

Modernisation of Rice Mills.

*55. *Q.*—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the Government have ordered the modernisation of rice mills ; and

(*b*) if so, the details thereof ?

அரிசி மில்களில் நவீன இயந்திரங்களை நிறுவுதல்

திரு. எல். பலராமன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரிசி மில்களில் நவீன இயந்திரங்களை நிறுவ அரசு உத்தரவு இட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) 1968ஆம் ஆண்டு அரிசி ஆலைத் தொழில் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் மூலம் 1958 ஆம் ஆண்டு அரிசி ஆலைத்தொழில் (முறைப்படுத்துதல்) சட்டத்தையும் 1970 ஆம் ஆண்டு அரிசி ஆலைத் தொழில் (முறைப்படுத்துதல்—உரிமம் வழங்குதல்) விதிகளின் மூலம் 1959ஆம் ஆண்டு அரிசி ஆலைத் தொழில் (முறைப்படுத்ததுதல்—உரிமம் வழங்குதல்) விதிகளையும் இந்திய அரசு திருத்தியமைத்தது. திருத்தச் சட்டமும் விதிகளும் 1—5—1970 முதற் கொண்டு செயலுக்கு வந்தன. திருத்தச்சட்டத்தின்படி, ஒன்றுக்கு மேற் பட்டு அரைவை இயந்திரங்களை உடைய அரிசி ஆலைகள் அனைத்தும், திருத்தச் சட்டமும் விதிகளும் செயலுக்கு வந்த நாள் முதற்கொண்டு மூன்று ஆண்டு களுக்குள், தங்களது ஆலைகளில் உமி நீக்குவதற்காக பூமிக்கு அடியில் செல் லும் உமிநீக்கும் யந்திரத்தையும் நெல்லைப் பிரித்தெடுக்கும் கருவியையுமோ அல்லது நெல்லை புடைத்து எடுக்கும் கருவி அமைப்புடன் கூடிய ரப்பர் வளையத்தில் இயங்கும் உமிநீக்கும் யந்திரத்தையும் நெல்லைப் பிரித்தெடுக்கும்

கருவியையுமோ நிறுவவேண்டும். அரிசியைத் தீட்டுவதற்கு மட்டுமே அரவை யந்திரங்கள் பயன்படுத்தப்படவேண்டும். உமிநீக்கும் யந்திரம்—அரவை யந்திரத்திலும் உமிநீக்கும் யந்திரங்களிலும் நெல்லைப் புடைத்தெடுக்கும் கருவி அமைப்புடன் ரப்பர் வளையத்தில் இயங்கும் உமிநீக்கும் யந்திரமும் நெல்லைப் பிரித்தெடுக்கும் இயந்திரமும் நிறுவப்பட வேண்டும். இத்திருத்தச்சட்டம் மாவட்ட வருவாய் அதிகாரிகள் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. யந்திரத்தில் தேவையான மாற்றங்களைச் செய்து முடிப்பதற்காக 1—9—1970 முதல் மூன்று ஆண்டுக்கால அளவினை உரிமம் வழங்கும் அதிகாரி அதாவது மாவட்ட வழங்கல் அதிகாரி அனுமதிக்கலாம் என்று அவர்களுக்கு 1970 ஆகஸ்ட் திங்களில் தெரிவிக்கப்பட்டது.

MR. CHAIRMAN : Question time is extended.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இப்படி மாற்றியமைப்பதால், மாநில அளவில் கூடுதலாக எவ்வளவு அரிசி கிடைக்கும் என்று ஏதாவது கணக்கிடப்பட்டு, அதற்கான புள்ளிவிவரங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, நமது நாட்டில் பொதுவாக புழுங்கல் அரிசியைத்தான் விரும்புகின்றார்கள். இந்த ரப்பர் ரோலரை உபயோகிக்கும்போது, வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட ரப்பர் ரோலரை உபயோகிக்கும்போது, நன்கு பாலிஷ் ஏறியது. ஆனால் நமது நாட்டிலேயே உற்பத்தியாகும் ரோலரை உபயோகிக்கும்போது அரிசி சற்று பழுப்பு நிறமாகத்தான் இருக்கின்றது. சத்துள்ளதாக அமைந்தாலும், நிறம் பழுப்பு நிறமாக இருப்பதால், அதை மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ள முன்வருவதில்லை. எனவே இதைப் பரிசீலிக்க வல்லுனர்களைக் கேட்டிருக்கின்றோம். இப்போது ஹல்லர் ரோலரை மட்டும் போட்டுக்கொள்ளுகின்றதா அல்லது ரப்பர் ரோலரைப் போட்டுக்கொள்ளுகின்றதா என்பது பரிசீலனையில் இருக்கின்றது. நண்பர் அவர்கள் இதுபற்றிக் கேட்பதற்கு முன்பே, இது விஷயத்தில் அடுத்த மார்ச் திங்கள் வரையில் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

Cellular Concretes.

* 56 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether any survey has been conducted into the requirements of Cellular Concretes by (i) the Private Sector, (ii) the Government and (iii) the Public Sector, per year ; and

(*b*) if so, the details thereof ?